*கவனிக்க.-2023.03.31 ஆந் திகதிய 2326 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி  IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2327 - 2023  අප්‍රේල් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.04.06
*2327 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 560 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 558 | ஏல விற்பனைகள் | 562 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஏப்பிறல் மாதம் 28ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

557 - B 082443 - 5,403 (2023/04)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம்- யாழ்ப்பாணம்

நீமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், உழவியந்திரப் பெட்டிகள் மற்றும் ஏனைய பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை

01. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாததுமான பின்வரும் மோட்டார் சைக்கிள்கள், உழவியந்திரப் பெட்டிகள் மற்றும் ஏனைய பொருட்கள் 2023.04.15ஆந் திகதி இந் நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

02. எவரேனும் ஒருவர் இங்கு குறிப்பிட்டுள்ள ஏதாவது பொருட்களை உரிமை கோருமிடத்து, அவர் தனது கோரிக்கையை விற்பனை தொடங்குதவற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டும்.

03. பொது மக்கள், மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிடலாம்.

04. ஏல விற்பனையின்போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களுக்கு மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏலவிற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

05. ஏல விற்பனையில் விற்கப்பட்ட பொருட்களுக்கான பணத்தினை உடனே செலுத்தி, அப்பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவில் இருந்து அகற்ற வேண்டும். சகல கொடுப்பனவுகளும் காசாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏ.ஏ. ஆனந்தராஜா,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

### சான்றுப் பொருட்களின் விபரம்

| தொ. இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் இலக்கம் | சான்றுப் பொருட்களின் விபரம் |
|---|---|---|---|
| 01 | MC/2825/S/22 | PR/682/22 | சுத்தியல் -01 |
| | | | பிக்கான் -01 |
| | | | உளி -02 |
| | | | இரும்புப் பட்டம் -05 |
| | | | 06 அடி நீளமான இரும்புப் பைப் -02 |
| 02 | MC/2826/S/22 | PR/683/22 | மண்வெட்டி -01 |
| | | | பிக்கான் -01 |
| | | | சவள் -01 |
| | | | சுத்தியல் -02 (சிறியது) |
| | | | உளி -03 |
| | | | இரும்புப் பட்டம் -05 |

| தொ. இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் இலக்கம் | சான்றுப் பொருட்களின் விபரம் |
|---|---|---|---|
| 03 | MC/2827/S/22 | PR/681/22 | சுத்தியல் -01 |
| | | | பிக்கான் -01 |
| | | | மண்வெட்டி -01 |
| | | | உளி -03 |
| | | | இரும்புப் பட்டம் -05 |
| 04 | AR/22/23 | PR/2614/22 | துவிச்சக்கர வண்டி- 10 |
| | | PR/2357/22 | துவிச்சக்கர வண்டி- 01 |
| 05 | MC/617/PC/22 | PR/81/22 | LUCAS 90 அம்பியர் பற்றரி- 01 |
| 06 | MC/2179/PC/21 | PR/755/21 | Samsung J1 வர்க்க கைத் தொலைபேசி- 01 |
| 07 | BR/492/PC/21<br>MC/1544/PC/22 | PR/994/21 | துவிச்சக்கர வண்டி- 01(69807316) |
| 08 | AR/914/22 | PR/237/22 | Nokia வர்க்க கைத் தொலைபேசி- 01 |
| | | PR/2042/18 | INTEX வர்க்க கைத் தொலைபேசி- 01 |
| | | PR/236/22 | Samsung வர்க்க கைத் தொலைபேசி- 01 |
| | | PR/1724/21 | Itel வர்க்க கைத் தொலைபேசி- 01 |

| தொ.இல. | வழக்கு இலக்கம் | சான்றுப் பொருள் விபரம் | வாகன இலக்கம் | எஞ்சின் இலக்கம் | அடிச்சட்ட இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 01 | AR/473/22 | Super cup மோட்டார் சைக்கிள் | NP MF 4088 | JLIP47FMF-505A316651 | LAAAXKFB450005628 |
| 02 | AR/474/22 | Pulsar 150CC மோட்டார் சைக்கிள் | NP UR 9526 | DHGBRE64248 | MD2DHZZRCD51610 |
| 03 | AR/475/22 | Pulsar 220 மோட்டார் சைக்கிள் | SP VS 7387 | DKGBTB49156 | MD2DHDKZZTCB 52635 |
| 04 | AR/476/22 | Splender மோட்டார் சைக்கிள் | EP TH 1769 | 06K29E00785 | MB4HA11EB69K00017 |
| 05 | AR/477/22 | Chally மோட்டார் சைக்கிள் | NP GI 7745 | CF50E – 2771556 | CF50-2771606 |

| தொ.இல. | வழக்கு இலக்கம் | சான்றுப் பொருள் விபரம் | வாகன இலக்கம் | எஞ்சின் இலக்கம் | அடிச்சட்ட இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 06 | AR/531/22 | Discover மோட்டார் சைக்கிள் | NP XQ 8386 | JZMBVA52823 | MD2DSJZZZVWA67109 |
| 07 | AR/842/22 | Pulsar 180CC மோட்டார் சைக்கிள் | NP JP 6129 | DJGBLE67171 | DJVBLE67474 |
| 08 | AR/399/22 | உழவியந்திரப் பெட்டி | — | — | — |
| 09 | AR/400/22 | உழவியந்திரப் பெட்டி | — | — | — |
| 10 | AR/401/22 | உழவியந்திரப் பெட்டி | — | — | — |
| 11 | AR/21/23 | உழவியந்திரப் பெட்டி | — | — | — |

04-150

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### அறிவித்தல்

கீழே விபரிக்கப்பட்டுள்ள கம்பனியானது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாகும்.

கம்பனியின் பெயர்: வூக்ஸ் (பிறைவட்) லிமிடட்
பதிவு இல.: PV 00273090
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2023.03.15
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல.116, மீராணியா வீதி, கொழும்பு 12

04-12

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பழைய பெயர்: கெமிலியா லேக் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இல.: PV 109391
கம்பனியின் பதிவு முகவரி: "விலா கெமிலியா", பொரலுகொட எஸ்டேட், நாகமுவ, ஹல்தொட்ட, இலங்கை
கம்பனியின் புதிய பெயர்: த பான்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

பணிப்பாளர் சபையின் கட்டளையின் பிரகாரம்,

த பான்ஸ் (பிரைவட்) லிமிட்டட்,
செயலாளர்.

04-85

### அறிவித்தல்

புளூ ஸ்டார் ரியாலிட்டீஸ் (பிறைவெட்) லிமிடெட்

கூறப்பட்ட மூலதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்பு

இலங்கை சட்டத்தின் முதலீட்டு சபையின் 17 ஆவது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனம் ஒன்றான புளூ ஸ்டார் ரியாலிட்டீஸ்

( பிறைவட்) லிமிடெட்டின் பங்குதாரர்கள் நிறுவனத்தில் தமது பங்குகளை குறைப்பதற்கு விருப்பத்தை வெளியிட்டிருப்பதோடு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கூறப்பட்ட மூலதனத்தை குறைக்க நிறுவனத்தின் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. அதன்படி,

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59 ஆவது பிரிவின் ஏற்பாட்டுக்கு அமைய முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 1,001,500,000.00 இனை நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனம் 100,150,000.00 முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளை பிரதிநிதித்துதவப்படுத்தும் ரூபா 200,600,000 ஆக குறைக்கப்பட்டிருப்பதை பங்குதாரர்களுக்கு பரிந்துரை செய்வதற்கு புளூ ஸ்டார் ரியாலிட்டீஸ் ( பிறைவெட்) லிமிடெட் (நிறுவனம் பணப்பாளர் சபை தீர்மானித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

மேற்கூறிய குறைப்பு வழங்கப்பட்ட மற்றும் முழுமையாக செலுத்தப்பட்ட நிறுவனத்தின் சாதாரண பங்குகளின் எண்ணிக்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது ரூபா 901,350,000.00 அளவுக்கு அதன் கூறப்பட்ட மூலதனத்திற்கு எதிராக பணம் செலுத்துவதால் செயற்படுத்தப்படும்.

கூறப்பட்ட முதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்புக்காக சிறப்புத் தீர்மானம் ஒன்றுக்கு பங்குதாரர்களின் ஒப்புதலை பெற 60 நாட்கள் முன்னறிவித்தலுடன் நிறுவனத்தின் விசேட பொதுக்கூட்டம் கூட்டப்படும்.

அஸைன்மன்ட் (பிறைவேட்) லிமிட்டட்,
புளூ ஸ்டார் ரியாலிட்டீஸ்
(பிறைவெட்) லிமிடெட்,
செயலாளர்கள்,

இல.200/ 1/1, பார்க் ஒழுங்கை,
ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
ராஜகிரிய,

2023.03.28.

04-127

## விசேட அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

இத்தால் சகலருமறிக, அவுஸ்திரேலியா, விக்டோரியா மாநிலத்தில் DANDENONG 3175, TRENDE STREET, இலக்கம் 12 இல் வதியும் குமாரு ஆறுமுகம் ஆகிய நான், அவுஸ்திரேலியா, பரிஸ்டர் மற்றும் சொலிஸிட்டர் K.P. அரவிந்தன் முன்பாக2012.06.05 ஆந் திகதியில் நிறைவேற்றப்பட்ட விஷேட அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் எனது சார்பாக சகல விவகாரங்களை நிர்வகிக்க இல. 40/2, திருவையாறு, கிளிநொச்சி, இலங்கை என்னும் இடத்தைச் சேர்ந்த குமாரசாமி தவராஜசிங்கம் (தே.அ.அ.இல. 500893346V) என்பவருக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது குறித்த விஷேட அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் குமாரசாமி தவராஜசிங்கம் என்பவருக்கு கொடுத்த எல்லா வலுவும் அதிகாரமும் 2021.11.05 ஆந் திகதியில் இத்தால் முடிவுறுத்தப்பட்டு குறித்த விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை மீளப் பெற்று இரத்துச் செய்வதாக இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

குறித்த விஷேட அற்றோணித் தத்துவப் பத்திரம் யாழ்ப்பாணம் வடக்கு வலய உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் 2612/ 15.06.2012 என்ற தினப்பதிவேட்டு இலக்கத்திலும் திகதியிலும் Vol.59,Folio 88 இல் பதியப்பட்டுள்ளது.

குமாரு ஆறுமுகம்.

04-25

---

## அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

இல. 27/6, கம்மடுவ வீதி, ரத்தோட்டை எனும் முகவரியில் வசிக்கும் முத்தையா குமாரவேல் ( தே.அ.அ.இல. 543561223V) ஆகிய நான், இலங்கைச் சனநாயாக சோசலிசக் குடியரசின் அனைவருக்கும் தெரிவிப்பதாவது, எஸட். பி. எச். நபீல் பிரசித்த நொத்தாரிசினால் 13965 இலக்கத்தில் சான்றுப்படுத்தப்பட்டு 2011.11.22 ஆந் திகதியில் ராமய்யா சுமித்ரன் ( தே.அ.அ.இல. 832851329V) என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

முத்தையா குமாரவேல்.

2023.03.28.

04-41

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

திலெப் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்
கணக்கு இல.: 0096 1000 1855.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2021.01.27ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.03.19ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2021.03.05ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு கோடியே இருபத்திரண்டு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து தொளாயிரத்து நாற்பத்து நான்கு ரூபா நாற்பத்தொரு சதம் (ரூபா 4,22,68,944.41) 2020, திசெம்பர் 16 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை மூன்று கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து இருபத்தாறாயிரம் ரூபா (ரூபா 3,49,26,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 3446 மற்றும் 3670 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.05.10 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே ராகம் பத்துவின் வத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் ஹெந்தளை தெற்கு 172 கிராம அலுவலர் பிரிவின் அல்விஸ் டவுனில் அமைந்த எல இவ்ர வீதி வரிமதிப்பீட்டு இல. 90/ 07 ஐ ஏற்ற "நெதுன்காஹாகும்புர (தற்போது உயர் காணி)" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஹிவூ ஆர். சமரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2018, நவெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 8519 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : வடிகால்; கிழக்கு : றொடெஸ் (பிரைவட்) லிமிட்டட் இற்கு சொந்தமான காணி; தெற்கு : வீதி (இல. 12873 எனும் வரைபடத்தில் லொட் Z) மற்றும் லொட் 2; மேற்கு : லொட் 2 மற்றும் 3 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் ஆறு தசம் சைபர் எட்டு பேர்ச் (0ஏ. 1றூ. 6.08பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8519 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் UL 418/ 40 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஹிவூ ஆர். சமரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 1085 எனும் வரைபடத்தில் லொட் 4B மற்றும் கூறப்பட்ட இல. 8519 எனும் வரைபடத்தில் லொட் 2 மற்றும் அத்துடன் இணைந்த ஏனைய உரிமைகள் மற்றும் அதன்மீதும் அதன் கீழும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

04-116

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

சுதேஷ் எண்ட்டபிரைசார்ஸ் அன்ட் எக்ஸ்போட்டார்ஸ்
கணக்கு இல. 0008 1001 3508

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2022.06.30ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.03.03ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.02.24ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே நாற்பத்தி இரண்டு இலட்சத்து முந்நூற்று பதின்மூன்று ரூபா எண்பத்தி ஏழு சதம் (ரூபா 1,42,00,313.87) 2022, மே 30 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இருபத்தி இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூபா 22,50,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைத்து வீதம் (15%) மேலும்

ஒரு கோடியே பதினொரு இலட்சத்து ஐம்பதினாயிரத்து இருநூற்று பதின்மூன்று ரூபா (ரூபா 11,150,213) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரெண்டு வீதம் (12%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு ஈட்டு முறி இல. 5685 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.05.11 ஆந் திகதி மு.ப.12.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே, ராகம் பத்துவின், பேலியகொடை நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் களனி பிரதேச செயலாளர் பிரிவின் இல. 174, பேலியகொட கிராம அலுவலர் பிரிவின் பேலியகொடை பராக்கிரம மாவத்தையில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 100 ஐ ஏற்ற "அஸ்மெடியவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஏ. குணவர்தன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016,யூலை 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 2052 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் X என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: பராக்கிரம மாவத்தை, இல. 96, சிலோன் பென்சில் கோப்பரேஷன் லிமிட்டெட் வளவுகள்; கிழக்கு: பராக்கிரம மாவத்தை, இல. 96, சிலோன் பென்சில் கோப்பரேஷன் லிமிட்டெட் வளவுகள் ; தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச்.ஏ. பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3134 எனும் கூறப்பட்ட வரைபடத்தின் லொட் A 2A பராக்கிரம மாவத்தை, 6 அடி அகல பாதை, பராக்கிரம மாவத்தை, இல. 102/5 ஐ ஏற்ற வளவு மற்றும் மேற்கு: 6 அடி அகல பாதை, உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச்.ஏ. பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3134 எனும் கூறப்பட்ட வரைபடத்தின் லொட் A 2A மற்றும் பீ.ஜே. எஸ். ராஜபக்ஷ விற்கு சொந்தமான காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம்: முப்பத்தி இரண்டு பேர்ச்(0ஏ.0றூ.32பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்து நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2052 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 168/116 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே ஒன்றிணைக்கப்பட்ட காணியின் உபபிரிவான மேற் கூறப்பட்ட லொட் ஒ கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது.

1.கூறப்பட்டபேலியகொடையில்அமைந்த"அஸ்மெடியவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம்.டீ. ஜே.வீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, ஏப்பிறல் 07 ஆந் திகதியிடப்பட்ட இல. 7671 எனும் வரைபடத்தில் அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: பராக்கிரம மாவத்தை இல. 96, சிலோன் பென்சில் கோப்பரேஷன் லிமிட்டெட் வளவுகள்; கிழக்கு: பராக்கிரம மாவத்தை இல. 96, சிலோன் பென்சில் கோப்பரேஷன் லிமிட்டெட் வளவுகள்; தெற்கு: பராக்கிரம மாவத்தை, வீதி மற்றும் இல. 102/5 ஐ ஏற்ற வளவு, வளவு பராக்கிரம மாவத்தை மற்றும் மேற்கு: வீதி மற்றும் லெஸ்லி ஆர் பொன்சேக்கா மற்றும் ஏனையோரின் காணி , ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம்: இருபத்தி எட்டு தசம் ஐந்து சைபர் பேர்ச்(0ஏ.0றூ.28.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 7671 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 168/11 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2.கூறப்பட்ட பேலியகொடையில் அமைந்த "அஸ்மெடிய வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச். ஏ. பீரிஸ் என்பவரால் தயாரிக் கப்பட்ட 1982, செத்தெம்பர் 15ஆந் திகதியிடப்பட்ட இல. 3134 எனும் வரைபடத்தில்அனைத்தும்பிரித்துஎல்லைகள்நிர்ணயிக்கப்பட்டு லொட் A1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: சிலோன் பென்சில் கம்பனி லிமிட்டெட்டின் சொத்து; கிழக்கு: வின்சன்ட் ராஜபக்ஷவின் சொத்து ; தெற்கு: லொட் A2 மற்றும் மேற்கு: பீ ஜே எஸ் ராஜபக்ஷவின் சொத்து, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் நான்கு தசம் நான்கு நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 4.44பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3134 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 168/13 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

04-123

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

சுதேஷ் எண்ட்டபிரைசார்ஸ் அன்ட் எக்ஸ்போட்டார்ஸ்
கணக்கு இல. 0008 1001 3508

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால்

2022.06.30ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.03.03ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.03.01ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), பத்திரிகைகளிலும் 2023.02.24 ஆந் திகதிய "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐந்து கோடியே அறுபத்தி ஐந்து இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து எண்ணூற்று எண்பத்தி எட்டு ரூபா ஐம்பது சதம் (ரூபா 5,65,43, 888.50) 2022, மே 30 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐந்து கோடியே இருபத்தி ஆறு இலட்சம் ரூபா (ரூ. 5,26,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) மேலும் பதினொரு இலட்சத்து இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 11,02,500.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு ஈட்டு முறி இலக்கங்கள் 5330,6422 மற்றும் 4656 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.05.11 ஆந் திகதி மு.ப.11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரலே அதிக்காரி பத்துவின் பியகமை பிரதேச சபை (மாகொல உப அலுவலகம்) எல்லைகளுக்குள் மற்றும் பியகம பிரதேச செயலாளர் பிரிவின் இல. 256B, பத்தலஹேன்வத்த கிராம அலுவலர் பிரிவின் கல்ஏதன்ட கிராமத்தில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 150 ஐ ஏற்ற "மீகாஹாவத்த பாஹால கொட்டச" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். விமலரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, மே 16 ஆந் திகதியிடப்பட்ட (2015, ஏப்பிறல் 10 ஆந் திகதியிடப்பட்ட மீள் அறவீட்டு ஒப்புதலிற்கு அமைவாக) இல.132/ 1999 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடகிழக்கிற்கு: வயல் வெளி; தென் கிழக்கிற்கு: டபிள்யூ. டீ. ஃபிரான்சிஸ் இற்குச் சொந்தமான காணி; தென் மேற்கிற்கு: கோஹோல்வில - கனவல வீதி மற்றும் வடமேற்கிற்கு: வீதி மற்றும் லோரா சேரம் இற்குச் சொந்தமான காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம்: ஒரு றூட் பத்து பேர்ச் ( 0ஏ.1றூ.10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 132/ 1999 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் N 379/98 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டாவது அட்டவணை**

16 Feet Storage Tank
18 Feet Storage Tank
Filter
Equipment falling Film Evaporator - Oil Dryer - 2018-01
Equipment surface Condenser - COND 2018-03
Thermo Compressor -VO-18-11951
Equipment Centrifuge Alfa Laval
Drier
Cooling System
Control Panal

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

04-122

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

மினுக்கி டிரேடிங் கம்பனி ( பிறைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல. 0050 1000 1007
கார்லோ இண்ட்டர் நெஷனல் ( பிறைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல. 0050 1000 4111

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.11.28ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.02.19ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2021.02.05ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பத்து கோடியே எழுபத்தி ஒன்பது இலட்சத்து எண்பத்தி ஐயாயிரத்து அறுநூற்று தொண்ணூற்றி இரண்டு ரூபா ஆறு சதம் (ரூபா 10,79,85,692.06) 2019, நவெம்பர் 06 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை முறையே பத்து கோடியே முப்பத்தி ஒன்பது இலட்சத்து இருபதாயிரம் ரூபா (ரூபா 10,39,20,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் நான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 984, 2065, 2838, 2836 மற்றும் 2834 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி

என்பவர்கள் மூலமாக 2023.05.09 ஆந் திகதி ( அட்டவணை -01) மு.ப.11.30 மணி , ( அட்டவணை -02) மு.ப.11.45 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனே வடக்கு களுத்துறை பெத்த களுத்துறை நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவின் வெலப்புர கிராம அலுவலர் பிரிவின் (கி. சே. பி. 725) வெலபுர—களுத்துறையில் அமைந்த பிரதான வீதி, வரிமதிப்பீட்டு இல. 118 ஐ ஏற்ற "அம்பகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். வீ. ரீ. பீ. ஜயசுந்தர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, மாச்சு 06 ஆந் திகதியிடப்பட்ட இல. 03/ 11 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: வரிமதிப்பீட்டு இல. 29 ஐ ஏற்ற வளவுகள், குறுக்குத் தெரு மற்றும் பிரதான வீதி வரிமதிப்பீட்டு இல. 116 ஐ ஏற்ற இதே காணியின் ஒரு பகுதி ; கிழக்கு : பிரதான வீதி (கொழும்பு முதல் காலி வரை) ; தெற்கு : பிரதான வீதி, வரிமதிப்பீட்டு இல. 120 ஐ ஏற்ற இதே காணியின் ஒரு பகுதி மற்றும் டி சில்வா வீதி மற்றும் மேற்கு : குறுக்கு வீதி, ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் நான்கு ஒன்பது ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 10.495பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 03/ 11 எனும் வரைபடத்திற்கு அமைவாக களுத்துறை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் C 48/137 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 984, 2065, 2838, மற்றும் 2836 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனே வடக்கு களுத்துறை பெத்த களுத்துறை நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவின் வெலப்புர இல. 725 எனும் கிராம அலுவலர் பிரிவின் களுத்துறை வெலபுரவில் அமைந்த சமரநாயக்க பிளேஸ், வரிமதிப்பீட்டு இல. 17 ஐ ஏற்ற "லிந்தமுலவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். வீ. ரீ. பீ. ஜயசுந்தர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2018, மாச்சு 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 4292 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இல. 03/ 22 எனும் வரைபடத்தின் லொட் A ; கிழக்கு : இல. 254 எனும் வரைபடத்தின் லொட் 3 ; தெற்கு : லிந்தமுளவத்தையின் ஒரு பகுதி மற்றும் இங்கு லொட் B1 மற்றும் மேற்கு : இங்கு லொட் B1 மற்றும் சமரனாயக்க இடம் இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஏழு தசம் ஆறு ஒன்பது பேர்ச் (0ஏ. 0றூ. 27.69பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4292 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

இல. 4292 எனும் வரைபடத்தில் கூறப்பட்ட B2 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் உப பிரிவின் மற்றும் மீள் அளவீடாகும்.

மேற்கூறப்பட்ட களுத்துறை வெலபுரவில் அமைந்த "லிந்தமுலவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். வீ. ரீ. பீ. ஜயசுந்தர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, ஏப்பிறல் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 03/ 22 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இங்கு லொட் A ; கிழக்கு : இல. 254 எனும் வரைபடத்தின் லொட் 3; தெற்கு: லிந்தமுளவத்தையின் ஒரு பகுதி மற்றும் மேற்கு : சமரநாயக்க இடம் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி ஆறு தசம் ஆறு ஒன்பது பேர்ச் (0ஏ. 0றூ. 36.69பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 03/ 22 எனும் வரைபடத்திற்கு அமைவாக களுத்துறை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் C 161/17 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(இல. 2834 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

04-110

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

கே. டபிள்யு. கே. டபிள்யு. பீ. கொப்பேகடுவ
கணக்கு இல. 0056 5000 9020

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.01.26ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.03.17ஆந் திகதிய இலங்கை

வர்த்தமானியிலும் (Gazette) 2023.03.13ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஆறு கோடியே எழுபத்தி எட்டு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரத்து அறுநூற்று அறுபத்தி நான்கு ரூபா அறுபத்தி ஆறு சதம் (ரூபா 67,877,664.66) 2022, திசெம்பர் 14 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நான்கு கோடியே இருபத்தி ஒரு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து எழுநூற்று எட்டு ரூபா இருபது சதம் (ரூபா 42,112,708.20) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரெண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) மேலும் நாற்பது இலட்சம் ரூபா (ரூ 4,000,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு நான்கு வீதம் (4%) மேலும் ஒரு கோடியே அறுபத்தி ஒரு இலட்சத்து அறுபதினாயிரத்து ஐம்பத்தி ஒன்பது ரூபா எண்பத்தி நான்கு சதம் (ரூபா 16,160,059.84) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஆறு தசம் ஒன்பது மூன்று வீதம் (6.93%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2473, 2877, 655, 1411, 2879, 2475, 704, 3189, 15, 2585 மற்றும் 2292 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 1ஆம் அட்டவணையில் காட்டப்பட்ட சொத்துக்கள் நிலமனைகள் 2023.05.12 ஆந் திகதி பி.ப. 12.30மணி முதல், 2ஆம் அட்டவணையில் காட்டப்பட்ட சொத்துக்கள் நிலமனைகள் 2023.05.12 ஆந் திகதி பி.ப. 12.45 மணி முதல், 3ஆம் அட்டவணையில் காட்டப்பட்ட சொத்துக்கள் நிலமனைகள் 2023.05.12 ஆந் திகதி பி.ப. 1.30 மணி முதல், அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

1. மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவு தொம்பவெள கிராம அலுவலர் பிரிவின் தொம்பவெள, கல்வடுகும்புர, ஏல்லேபொல மற்றும் உல்பொத்தயாய கிராமங்களில் அமைந்த "இன்வர் லைன் எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. புன்சிஹேவா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, செத்தெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட (2013.10.26 ஆந் திகதியிடப்பட்ட உப பிரிவு) இல. 8956 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இதே வரைபடத்தின் லொட் A மற்றும் (மிகத் திருத்தாமாக) இல. 606/ 2012 எனும் வரைபடத்தின் லொட் 03 (1 மீற்றர் அகல பாதை); கிழக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ தொளொஸ்வெள என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3130 எனும் வரைபடத்தில் லொட் 5, குரே (காலம் சென்ற தனபால என்பவரின் மனைவி) உரிமம் கோரும் காணி; தெற்கு: இல. 606/ 2012 எனும் வரைபடத்தின் லொட் 5 மற்றும் இதே வரைபடத்தின் லொட் B2, மற்றும் மேற்கு: கலேவல முதல் கண்டி வரையான வீதி (RDA), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர் மற்றும் ஐந்து தசம் நான்கு ஒன்பது பேர்ச் (02ஏ. 00றா. 5.49பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8956 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 282/40 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம், மாத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவு தொம்பவெள கிராம அலுவலர் பிரிவின் தொம்பவெள, கல்வடுகும்புர, ஏலெபொல மற்றும் உல்பொத்தயாய கிராமங்களில் அமைந்த "இன்வார் லைன் எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு (உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. புன்சிஹேவா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, ஒற்றோபர் 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 8961 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் A மற்றும் B இன் ஒன்றிணைப்பு) உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. புன்சிஹேவா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, ஒற்றோபர் 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 8969 ஆம் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: கே. டப்ளியூ. பீ. கொப்பேகடுவ உரிமம் கோரும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. புன்சிஹேவா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 8956 ஆம் வரைபடத்தின் லொட் B1; கிழக்கு: குரே காலம்சென்ற தனதர்ம என்பவரின் மனைவி உரிமம் கோரும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ தொளொஸ்வெள என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3130 எனும் வரைபடத்தில் லொட் 5; தெற்கு: விதான ஆரச்சிகே காந்திகா மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் காணி மற்றும் மேற்கு: 12 அடிகள் அகல வீதி (உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. புன்சிஹேவா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 8956 எனும் வரைபடத்தின் லொட் B2) மற்றும் கே. டப்ளியூ. பீ. கொப்பேகடுவ உரிமம் கோரும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட்கள் (00ஏ. 02றூ. 00பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8969 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் A 282/ 38 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. புன்சிஹேவா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, செத்தெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 8956 எனும் வரைபடத்தின் லொட் B2 என்ற வழி மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

3. மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம், மாத்தளை தெற்கு கோரளே கம்பஹாசீய பத்துவின் மாத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவு தொட்டகமுவ - E328C கிராம அலுவலர் பிரிவின் தொட்டகமுவவில் அமைந்த "பிரிதேவால எஸ்டேட் இன் ஒரு பகுதி பளுகம" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. புன்சிஹேவா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, யூலை 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 8951 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: கிரிஷ்ணகுமாரி மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் இதே காணியின் எஞ்சிய பகுதி; கிழக்கு: இதே காணியின் எஞ்சிய பகுதி; தெற்கு: இதே காணியின் எஞ்சிய பகுதி மற்றும் லொட் 2 (10 அடி அகல வீதி) பிரதான வீதிக்கு மற்றும் மேற்கு: அன்னமுத்து உரிமம் கோரும் நிக்கவெல எஸ்டேட் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட்கள் மற்றும் மூன்று தசம் எட்டு பேர்ச் (00ஏ. 03றூ. 3.8பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8951 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 295/133 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. புன்சிஹேவா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, யூலை 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 8951 எனும் வரைபடத்தின் லொட் 2 இன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

04-111

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

டிமொஷொன்க்கோ இன்ஜினியரிங் கம்பனி ( பிரைவட்) லிமிட்டெட்
கணக்கு இல. 0130 1000 0194

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.10.29ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.11.13ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2020.11.12ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான முப்பத்தி ஆறு கோடியே எழுபத்தி இரண்டு இலட்சத்து ஐயாயிரத்து முந்நூற்று ஐம்பத்தி நான்கு ரூபா எண்பத்தி நான்கு சதம் (ரூபா 36,72,05,354.84) 2020, செத்தெம்பர் 11 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நான்கு கோடி ரூபா (ரூபா 4,00,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு இருபத்தி இரண்டு வீதம் (22%) மேலும் இருபத்தி ஆறு கோடி ரூபா (ரூபா 26,00,00,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + Three Per Centum (3%) Per annum மேலும் ஒரு கோடியே ஐம்பத்தி ஒரு இலட்சம் ரூபா (ரூபா 1,51,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதினாறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கம் 3022 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.05.08 ஆந் திகதி பி.ப. 1.30 மணி முதல், அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லே பத்துவே கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் பம்பலபிட்டி கிராம அலுவலர் பிரிவின் பம்பலபிட்டியவில் அமைந்த ஆதார்ஸ் இடம் வரிமதிப்பீட்டு இல. 13, 13A, 13B என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. பீ. தொடன்வெல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, பெப்புருவரி 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 11484 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: ஆதார்ஸ் இடம் மற்றும் வரிமதிப்பீட்டு இல. 11 ஐ ஏற்ற வளவுகள் ; கிழக்கு : ஆதார்ஸ் இடம் மற்றும் வரிமதிப்பீட்டு இல. 11 ஐ ஏற்ற வளவுகள் மற்றும் பம்பலபிட்டி புகையிரத நிலைய வீதி வரிமதிப்பீட்டு இல. 16 ஐ ஏற்ற வளவுகள்; தெற்கு: பம்பலபிட்டி புகையிரத நிலைய வீதி வரிமதிப்பீட்டு இல. 16 மற்றும் 18 ஐ ஏற்ற வளவுகள் மற்றும் ஆதார்ஸ் இடம் வரிமதிப்பீட்டு இல. 19 ஐ ஏற்ற வளவுகள் மற்றும் மேற்கு : ஆதார்ஸ் இடம் வரிமதிப்பீட்டு இல. 19 ஐ ஏற்ற வளவுகள், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஆறு தசம் நான்கு ஒன்று பேர்ச் (0ஏ.0றூ.26.41பே.)

விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 11484 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

இல. 11484 எனும் கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 1 கீழே காட்டப்பட்ட காணியின் ஒன்றிணைப்பாகும்.

1. கூறப்பட்ட பம்பலபிட்டியவில் அமைந்த ஆதார்ஸ் இடம் வரிமதிப்பீட்டு இல. 13, என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ரீ. சமீர் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1965, சனவரி 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 897 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : வடக்கு : ஆதார்ஸ் இடம் ; கிழக்கு: இதே காணியின் லொட் C பகுதி ; தெற்கு : இதே காணியின் லொட் B பகுதி மற்றும் மேற்கு : ஆதார்ஸ் இடம் வரிமதிப்பீட்டு இல. 19 ஐ ஏற்ற வளவுகள், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினொன்று தசம் ஐந்து ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.11.59பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 897 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் E 117/84 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. கூறப்பட்ட பம்பலபிட்டியவில் அமைந்த ஆதார்ஸ் இடம் வரிமதிப்பீட்டு இல. 13, என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ரீ. சமீர் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1965, சனவரி 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 897 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : வடக்கு : இதே காணியின் லொட் A மற்றும் C பகுதி ; கிழக்கு: ஆதார்ஸ் இடம் இல. 11 ; தெற்கு: பம்பலபிட்டி புகையிரத நிலைய வீதி வரிமதிப்பீட்டு இல. 16 மற்றும் 18 மற்றும் மேற்கு : ஆதார்ஸ் இடம் வரிமதிப்பீட்டு இல. 19 ஐ ஏற்ற வளவுகள், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரெண்டு தசம் ஆறு ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.12.65பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 897 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில பரிமாணம்/பக்கம் E 117/85 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. கூறப்பட்ட பம்பலபிட்டியவில் அமைந்த ஆதார்ஸ் இடம் வரிமதிப்பீட்டு இல. 13, என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ரீ. சமீர் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1965, சனவரி 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 897 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் C எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : வடக்கு : ஆதார்ஸ் இடம் ; கிழக்கு: ஆதார்ஸ் இடம் இல. 11 ; தெற்கு: இதே காணியின் லொட் D (மிகத்திருத்தமாக லொட் B) ; மேற்கு : இதே காணியின் லொட் A, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு தசம் ஒன்று ஏழு பேர்ச் (0ஏ.0றூ.2.17பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 897 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில பரிமாணம்/பக்கம் E 117/86 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

04- 112

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

வீ. எஸ். ரீ டி மெல் மற்றும் ரீ.ஜீ.பீ. குணசேக்கர
கணக்கு இல. 0177 5000 5357

